பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 01 2026** **MONDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தொன்மை சிறப்புமிக்க சோம்நாத் ஆலய திருப்பணிக்கான முயற்சியை வரவேற்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது, தேசிய மாணவர் படை முக்கிய பங்காற்றியதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

3. இந்திய கடலோர காவல்படையின் **Samudra Pratap** மாசு கட்டுப்பாட்டு கப்பலை மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

4. மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

5. வெனிசுலா மீதான அமெரிக்க ராணுவ நடவடிக்கை குறித்து விவாதிக்க ஐ நா பாதுகாப்பு சபையின் அவசரக்கூட்டம் இன்று நடைபெறுகிறது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

சோம்நாத் ஆலயம் நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க நாகரிக உணர்வை வெளிப்படுத்துவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம் **Prabhas Patan**-த்தில் உள்ள இந்த சோம்நாத் ஆலயம், தாக்கப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்தையொட்டி, பிரதமர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கி.பி. ஆயிரத்து **26**-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் **Ghazni** மாகாணத்தை ஆண்ட **Mahmud**-தால் இந்த ஆலயம் ஆக்கிரமிக்கப்பட்டதை குறிப்பிட்டுள்ளார்.

சோம்நாத் ஒரு ஆலயத்தின் வரலாறு மட்டுமின்றி, ஆயிரக்கணக்கான பாரத தாயின் குழந்தைகள் நாட்டின் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டதை எடுத்துக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் இதயத்தில் பெருமை சேர்க்கும் இந்த ஆலயம், நாட்டின் உயிர் நாடியாக திகழ்கிறது என்றும் கூறியுள்ளார்.

மக்களின் நம்பிக்கையாகவும், நாகரீகத்தின் அடையாளமாகவும் திகழ்ந்து வரும் இந்த சோம்நாத் கோவிலை அழிப்பதற்கான முயற்சிகள் எதுவும் வெற்றிபெறவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சோம்நாத் ஆலயத்தை புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளை பாராட்டுவதாக தெரிவித்த பிரதமர், 2026-ஆம் ஆண்டில் மற்றுமொரு மைல்கல்லையும் இந்த ஆலயம் எட்டும் என்றும் கூறியுள்ளார்.

1951-ஆம் ஆண்டு அப்போதைய குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் இந்த கோவிலை புனரமைப்பதற்கு மேற்கொண்ட முயற்சியை சுட்டிக்காட்டிய பிரதமர், 75 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது பெருமை அளிப்பதாகவும் கூறியுள்ளார்.

நாட்டின் சுதந்திரத்திற்கு பிறகு சர்தார் வல்லபாய் பட்டேல் இந்த கோவிலை புனரமைக்கும் பணியை மேற்கொண்டு சிறப்பாக செய்ததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**1890-**ஆம் ஆண்டு சோமநாத் ஆலயத்திற்கு சுவாமி விவேகானந்தர் விஜயம் செய்ததை குறிப்பிட்ட பிரதமர், **1897-**ஆம் ஆண்டு சென்னையில் நிகழ்த்திய சொற்பொழிவில் ஆலயத்தின் சிறப்புகளை சுவாமி விவேகானந்தர் பகிர்ந்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் எண்ணத்தையும், ஆத்மாவையும் உயிர்ப்பிக்கும் புனித தலமாகவும் சோமநாத் ஆலயம் திகழ்கிறது என்று திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், கோவாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய கடலோர காவல்படையின் **Samudra Pratap** மாசு கட்டுப்பாட்டு கப்பலை இன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

அப்போது பேசிய அவர், இந்த கப்பல் நாட்டின் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கும் என்று கூறினார்.

மாசு கட்டுப்பாடு மட்டுமின்றி, தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளுக்கும் இந்த கப்பலை பயன்படுத்தலாம் என்று அவர் தெரிவித்தார்.

தற்போதைய கடல்சார் சவால்களை எதிர்கொள்ள இந்த கப்பல் தயார் நிலையில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்திய கடலோர காவல்படை சார்பில் வாஸ்கோடகாமா கோவா கப்பல் கட்டும் தளத்தில் தயாரித்த நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மிகப்பெரிய கப்பல் இதுவாகும்.

<<<<<<>>>>>

தமிழகத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ள பிஜேபி-யின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, திருச்சியில் ஸ்ரீரங்கநாதர் கோவில், திருவானைக்காவல் ஜம்புகேஷ்வரர் திருக்கோவிலுக்கு சென்று வழிபட்டார்.

திருச்சி மன்னார்புரத்தில் மாநில பிஜேபி சார்பில் ஏற்பாடு செய்திருந்த நம்ம ஊரு மோடி பொங்கல் விழாவில் பங்கேற்றார்.

பிஜேபியின் மூத்த தலைவர்கள் திரு பியூஷ் கோயல், திரு அர்ஜுன் ராம் மெக்வால், இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் ஆகியோர் இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார.

ஈரோட்டில் விவசாய அணி சார்பில் நடைபெற்றுவரும் விவசாய கண்காட்சியை பார்வையிட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மஞ்சள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுவதை தடக்கும் வகையில் மின்னணு வணிகம் மூலம் நாடு முழுவதும் இதனை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

மஞ்சளின் தரத்தை பரிசோதித்து அதற்கு உரிய விலை கிடைக்கும் வகையில் ஈரோட்டில் ஆய்வகம் உருவாக்கித் தரப்படும் என்றும், குளிசாதன கிடங்கு அமைக்கவும் ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக அரசுக்கு, மத்திய அரசு அளித்த தொள்ளாயிரம் கோடி ரூபாயில் இந்த குளிர்பதன கிடங்கை அமைக்க பரிந்துரை செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

மஞ்சள் அறுவடை, உலர்த்துதல், பதப்படுத்துதல் போன்றவற்றிற்கு புதிய இயந்திரங்கள் கொண்டுவரப்படும் என்று தெரிவித்த திரு சிவ்ராஜ் சிங் சௌகான், மஞ்சளை மதிப்புக்கூட்டுவதற்கான புதிய திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்த உள்ளதாகவும் கூறினார்.

<<<<<<>>>>>

புதுதில்லியில் **2020-**ஆம் ஆண்டு நடந்த வன்முறை தாக்குதலில் தொடர்புடைய **Umar Khalid** மற்றும் **Sharjeel Imam** ஆகியோருக்கு ஜாமீன் வழங்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

இவர்களின் ஜாமீன் மனுவை விசாரித்த நீதிபதிகள் திரு அரவிந்த் குமார், திரு அஞ்சாரியா ஆகியோர் கொண்ட அமர்வு, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின்கீழ், இந்த இருவரும் குற்றம் புரிந்த தற்கான முகாந்திரம் உள்ளதாக தெரிவித்தது.

இருப்பினும், இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள மேலும் ஐந்து பேருக்கு ஜாமின் வழங்கி நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

<<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது, தேசிய மாணவர் படை முக்கிய பங்காற்றியதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்க உள்ள தேசிய மாணவர் படையினரின் முகாமை பார்வையிட்டபின் பேசிய அவர், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது 72 ஆயிரம் தேசிய மாணவர் படையினர் உள்நாட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டதாக கூறினார்.

தேசிய மாணவர் படையினர் தேசப்பற்றுடனான குடிமக்களை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுவதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

முன்னாள் மத்திய அமைச்சர் திரு முரளி மனோகர் ஜோஷி-யின் பிறந்தநாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், சிறந்த குடிமகனாகவும், தேசியவாதியாகவும் திகழ்ந்த திரு ஜோஷி, நாட்டின் கல்வி, கலாச்சாரம் மற்றும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த பாடுபட்டவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜிக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது பிறந்த நாள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அவர் நலமோடும், நீண்ட ஆயுளோடும் வாழ பிரார்த்தனை செய்வதாக பிரதமர் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த இயக்கத்தின்மூலம், வேலைநாட்கள் 125 நாட்களாக உயர்த்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

***(Sound Byte — பயணாளிகள் - 37 Sec.)***

<<<<<<>>>>>>

அயோத்தியில் ஸ்ரீராமர் ஆலயத்தை சுற்றி நான்கு கிலோமீட்டர் நீளத்திற்கு கட்டப்பட்டுவரும் சுற்றுச்சுவர் பாதுகாப்பானது என்று இந்த ஆலயத்தின் தலைமை நிர்வாகி திரு **Nripendra Mishra** கூறியுள்ளார்.

தற்போது இந்த சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த சுற்றுச்சுவரில் அனைத்து பாதுகாப்பு அம்சங்களும் அமைக்கப்படும் என்று கூறியுள்ள அவர், எந்த விதத்திலும் சுவரை கடந்து ஊடுருவ இயலாது என்றும் தெரிவித்துள்ளார்.

கோவிலின் பாதுகாப்புக்காக நான்கு கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த சுற்றுச்சுவர் கட்டுமானப் பணிகளுக்கு **80** முதல் **90** கோடி ரூபாய் வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

வெனிசுலா மீதான அமெரிக்க ராணுவ நடவடிக்கை குறித்து விவாதிக்க ஐ நா பாதுகாப்பு சபையின் அவசரக்கூட்டம் இன்று நடைபெறுகிறது.

நிரந்தர உறுப்பினர் அல்லாத கொலம்பியா நாட்டின் கோரிக்கையை சீனா, ரஷ்யா ஆகிய நிரந்தர உறுப்பு நாடுகள் ஆதரித்ததையடுத்து, இக்கூட்டம் நடைபெறுகிறது.

அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கை மூலம், வெனிசுலா அதிபர் திரு நிக்கோலஸ் மடுரோ கைது செய்யப்பட்டிருப்பது தவறான முன்னுதாரணம் என்று ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸ் தெரிவித்துள்ளார்.

வெனிசுலா மீதான அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகள் குறித்து ஐ நா பொதுச்செயலாளர் மிகுந்த கவலையளித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<END>>>>>>**